# ஜேம்ஸ் ஜாய்ஸ்: ஒருநாள் வாழ்க்கை ஒரு நாவல்

"யூலிசஸ்" எனும் தனது உலகப்புகழ் பெற்ற நாவலைப் பற்றி ஜாய்ஸ் ஒரு முறை சொன்னார்:" இந்த நாவலில் நான் பல விடுகதைகளை வைத்திருக்கிறேன். தாறுமாறாகக் கதை சொல்லி இருக்கிறேன்.எனவே என்னதான் சொல்ல வருகிறேன் என்பது புரியாமல் அதைக் கண்டு பிடிப்பதில் பேராசிரியரகள் தங்கள் நேரத்தைச் செலவிடுவார்கள்.. இதனால் எனது நாவல் பல நூற்றாண்டுகள் வாழும்"

ப்ளூம்ஸ் எனும் கதாபாத்திரத்தின் ஒருநாள் வாழ்க்கையை ஜாய்ஸ் "லிட்டில் ரிவியூ" எனும் அமெரிக்க பத்திரிகையில் மார்ச்சு 1918 இலிருந்து டிசம்பர் 1920 வரை ஒரு தொடர் கதையாக எழுதினார். இதனை மீண்டும் 1922இல்தான் முழுமையான நாவலாக தனது நாற்பதாவது வயதில் பாரீசில் வெளியிட்டார். தனது நாவல் புத்தகமாக வருவதற்குள்,அவர் ஏராளமான மாற்றங்களைச் செய்திருக்கிறார். சாகசம் விரும்பும் கிரேக்கக் கதாபாத்திரத்தின் பெயரையே தனது நாவலின் தலைப்பாக வைத்தார் ஜாய்ஸ். இந்த நாவல் மிகவும் ஆபாசமாக எழுதப்பட்டிருக்கிறது என்று அமெரிக்காவில் வழக்கு நடந்தது போலவே இந்த எழுத்து பல்வேறு விமர்சனங்களுக்கும் ஆட்பட்டது.

இத்தனைக்கும் ஜேம்ஸ் ஜாய்சின் யுலிசஸ் நாவல் அதிகமான இலக்கியப் பரிசோதனைகளில் ஈடுபடுவதின் காரணமாக வாசிப்பதற்குக் கடினமானது என்று பெயர் வாங்கிய புத்தகம். முற்றுப் புள்ளி இல்லாமல் ஜாய்ஸ் எழுதிச் செல்லும் உரைநடை வாசகனின் புரிதலுக்குச் சவால் விடக்கூடியதுதான். ஹோமர் எழுதிய கிரேக்கக்

காவியமான ”ஒடிசே” 18 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது போல ஜாய்ஸ் தனது நாவலையும் 18 பகுதிகளாகப் பிரித்திருக்கிறார். தாறுமாறாக எழுதப்பட்டது போலத் தோற்றமளிக்கும் இந்த நாவல் இலக்கியத்தில் புதிய எல்லைகளை நிறுவியது.

